செ.வெ.எண்: 852/2016 நாள்: 01.12.2016

# பத்திரிக்கைச் செய்தி

தமிழக அரசு கடும் வட்டி விதிப்பை தடை செய்யும் சட்டத்தை 2003-ல் கொண்டு வந்தது. இச்சட்டத்தில் தின வட்டி, மணி நேர வட்டி, மீட்டர் வட்டி தண்டல் உள்ளிட்டவைகள் கந்து வட்டி என கணக்கிடப்படுகிறது. கந்துவட்டி கொடுமையால் நாட்டில் தற்கொலைகள் அதிகரித்து உள்ளன. எனவே பொது மக்கள் கடன் பெறுவதற்கு முன்பு கீழ்க்காணும் விபரங்களை தெரிந்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

பணம் கடன் கொடுப்போர் சட்டத்தின் கீழ் அங்கீகாரம் பெறாத நிதி நிறுவனங்களில் அவர்களது வாக்குறுதிகளான உடனடி கடன், மிக குறைந்த வட்டியில் கடன் ஆகியவற்றை நம்பி பொதுமக்கள் ஏமாற வேண்டாம். மேலும் உரிமம் பெறாத நிதி நிறுவனங்களிடம் கடன் பெற வேண்டாம் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

மேலும் கடன் பெறும்போது ரிசர்வ் வங்கியின் அங்கீகாரம் பெற்ற வங்கி பரிவர்த்தனை அல்லாத நிதி நிறுவனங்கள் (Non Banking Financial Companies (NBFC's), மற்றும் தமிழக அரசிடம் உரிய அனுமதி பெற்றுள்ள நிதி நிறுவனத்தினரிடம் கடன் பெறுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

ரிசர்வ் வங்கியின் கீழ் பதிவு செய்துள்ள வங்கிகள் அல்லாத நிதி நிறுவனத்தினர் வழங்கும் கடனுக்காக வட்டி விகிதம் ரிசர்வ் வங்கியால் நிர்ணயம் செய்யப்பட மாட்டாது.

எனவே கடன் பெறும் முன்னர் அதற்கான நிபந்தனைகள், ஒப்பந்தங்கள், வட்டி விதிதம் ஆகியவற்றை பரிசீலனை செய்து ஆண்டுக்கு எவ்வளவு வட்டி என்பதனை கண்டறிந்து அதன்பின்பு கடன் பெறுவது தொடர்பாக முடிவு செய்யுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

மேலும் ரிசர்வ் வங்கியில் பதிவு செய்துள்ள வங்கிகள் அல்லாத நிதி நிறுவனங்கள; (Non Banking Financial Companies (NBFC's), தொடர்பாக விபரங்களை பின்வரும் இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம்.

**www.rbi.org.in sitemap NBFC list or at the link**

http://rbi.org.in/scripts/BS_NBFC list.aspx

எனவே கந்து வட்டிக்கு கடன் கொடுப்பது சட்டபடி குற்றமாகும். மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.